DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.24**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | விஷ்ணுகாந்த் |
| Father Name | : | ரத்தினவேலு |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.07.2025.

(2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 7வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது விழுப்புரம் துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு வழக்கு சம்பவ சமயத்தில் மதுரை தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தேன். என்னுடைய சரியான பெயர் திரு.விஷ்ணுகாந்த் ஆகும், ஆனால் தவறுதலாக சாட்சி பட்டியலில் எனது பெயர் விஷ்ணுகாந்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு போலிசார் வாட்ஸ் ஆப்பில் சம்மன் அனுப்பி இந்த வழக்கில் சாட்சியமளிக்குமாறு சொன்னார்கள். அதனால் வந்துள்ளேன். எனக்கு இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 11.01.2016ம் தேதி புதூர் காவல்

நிலைய குற்ற எண்.1017/2015 வழக்கில் சம்பந்தப்பட்ட TN 59 AL 0027 மாருதி ஸ்விப்ட் கார் பற்றிய விவரத்தை எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி விவரம் கேட்கப்பட்டது என்றும், அந்த வாகனமானது எஸ்.ராமக்கிருஷ்ணன், த/பெ.சுப்பிரமணியன் என்ற பெயரில் கடந்த 04.05.2009ம் தேதி எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.